**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 92 /2020**

**CNR.No.TNCB19000**

Date: 21.07.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சஞ்சீவ்குமார் | **வயது** | 30 |
| **த/பெ** | ராஜப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | காரமடை, டி.ஜீ.புதூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 21st July 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு தாக்கல் செய்த வாதிகள் அனைவரும் ரங்கசாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் தரப்பு தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்தேன் அதில் உள்ள விபரங்கள் தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் சொன்னது என்றால் எனது அப்பா சொன்னார். தாவா சொத்தை நான் கிரையம் வாங்குவதற்கு முன்னர் பூர்வீக சொத்தை விற்பனை செய்தவகையில் தான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான் பூர்வீக சொத்தை எனது கொள்ளு தாத்தா விற்பனை செய்து அவருடைய பாகத்தை எடுத்துக்கொண்டார் மீதமுள்ள பணத்தை வைத்து எனது அப்பாவும், தாத்தாவும் தாவா சொத்தை வாங்கினார்கள்.

எனது கொள்ளுதாத்தா விற்பனை செய்து அவரது பாகத்தை எடுத்துக் கொண்டதாக கூறுவது வழக்கிற்காக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல்" ரூ.3000/- மும் நாங்கள் எங்களில் 2 மற்றும் 3 இலக்கமிட்டவர்கள் பெயரால் காரமடை கிராமத்தில் வேறு காட்டு பூமி ஏக்.4.64 கிரையத்திற்கு மேற்படி தேதியில் வாங்கிய வகைக்காகவும் அதற்குண்டான செலவு தொகைக்காகவும் சாட்சிகள் முன்படி ரொக்கமாக பெற்றுக் கொண்டதாக " குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் ஏக்.4.64 ஆகும். வா.சா.ஆ.5 ல்

இராமைய கவுடர்க்கு என்று கிரைய தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எல்லாவிபரங்களும் தெரிந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் 147/1961 ன் மூலம் கிடைக்கப் பெற்ற ரூ.3000/- தொகையை இராமைய கவுடர். இரங்கசாமி கவுடர், இராஜப்பன் ஆகியோர் சமமாக பிரித்துக் கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபடி எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி கிரையத் தொகை ரூ.3000/- ஐ வைத்து தான் தாவா சொத்தை வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் 147/1961 ன் படி அதில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் கொள்ளுதாத்தா இராமைய கவுடருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஆவணம் 147/1961 ல் பிதுரார்ஜீத வகையில் பாத்தியப்பட்ட என்று உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஆவணம் 147/1961 மற்றும் 167/1961 ஆகிய இரண்டு ஆவணங்களும் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரே நாளில் தான் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களும் ஒரே நபரால் எழுதப்பட்ட விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

கிரைய ஆவண எண்.167/1961 க்கு எவ்வளவு முத்திரை தீர்வு கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் ரூ.2,000/- செலுத்திய விபரம் மட்டும் தெரியும். ரூ.2000/- விற்பனைக்காக மட்டும் தான் செலுத்தப்பட்டது என்றால் மொத்தமாகவா அல்லது விற்பனைக்காக பயன்படுத்தப்பட்டதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான கிரைய ஆவணம் 167/1961 ஏற்படுத்தப்படும் போது எனது தகப்பனாரின் வயது என்ன என்றால் 1 வயது. அந்த சமயத்தில் எனது தகப்பானருக்கு என்று எந்த வருமானமும் கிடையாது என்றால் சரிதான்.

எனது அத்தைகள் திருமணம் ஆகும் வரை தாவா சொத்தில் கூட்டுகுடும்பமாக இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த தாவா சொத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தில் இருந்து தான் குடும்பம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். இரங்கசாமி கவுடர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் 3 ஆம் பிரதிவாதி மாதையன் என்பவரிடம் கடன் பெறுவதை வழக்கமாக வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் தான் இரங்கசாமி கவுடர் மாதையனுக்கு பெயரளவில் கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல.

மேற்படி கிரைய ஆவணம் 1/1970 வா.சா.ஆ.7 வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது அப்பா எனக்கு எவ்வளவு விஸ்தீரனம் தான செட்டில் மெண்ட் மூலம்

எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் ஏக்.2.59 செண்ட். எனது தாத்தா இரங்கசாமி கவுடர் அவர்களும் எனது அப்பாவும் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார்களா என்றால் பட்டா மூலம் பாகம் செய்து கொண்டனர். பட்டா மூலம் பாகம் செய்து கொண்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. கிரைய ஆவணம் 1/1970 ல் எனது தாத்தா இரங்கசாமி கவுடருக்கும் எனது அப்பாவிற்கும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL Date: 2025.07.22 12:48:34 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.